

சென்னை, கோபாலபுரத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (08.07.2023) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீன மயமாக்கப்பட்ட அமுதம் மக்கள் அங்காடியை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை ஆணையாளர் வே.ராஜாராமன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.சுப்பையன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிர்வாக இயக்குநர் அ.சிவஞானம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலை, சி.எஸ்.ஐ. செவித்திறன் குறையுடையோருக்கான மேல்நிலைப் பள்ளியில், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில், நேற்று (08.07.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை இயக்குநர் கமல் கிஷோர், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் - கே.ஆர்.முருகேசன் புதல்வி மணவிழா!

### அமைச்சர் பெருமக்கள் - எம்.பி. - எம்.எல்.ஏ.க்கள் வாழ்த்துரை!

புதுக்கோட்டை, ஜூலை 9-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம், சத்திரம் ரெ.கருப்பையா (தங்கம்) - காந்திமதி ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், வீர.கோவிந்தன் - அழகம்மாள் ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும், திருவனந்த புரம் கே.ஆர்.முருகேசன் -சந்திரா ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் பிரியங்காவுக்கும்



அரியலூர் மாவட்டம், நல்லாம்பித்தை மூக்கப்பன் - மாரியாயி ஆகியோரின் மகன்வழிப் பேரனும், பி. கலியமூர்த்தி - மதுரம் ஆகியோரின் மகள்வழிப் பேரனும் மூ.கந்தசாமி - மணிமேகலை ஆகியோரின் புதல்வருமான டாக்டர் கே.ஸ்ரீராமுக்கும் மணவிழா இன்று (9.7.2023 - ஞாயிறு) காலை 7 மணியளவில் புதுக்கோட்டை - மாலையீடு கற்பக விநாயகர் மஹால் திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் நடைபெறுகிறது.

அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன் முன்னாள் மத்திய இணை அமைச்சர் க.வேங்கடபதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் எஸ்.பூச்சி முருகன், இரா.கிரிராஜன் எம்.பி., வை.முத்து ராஜா எம்.எல்.ஏ., இ. பரந்தாமன் எம்.எல்.ஏ. சின்னதுரை எம்.எல்.ஏ. உள்பட அமைச்சர் பெருமக்கள் - நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் இம்மணவிழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

## முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரியும்

## டி.தீபக் - பி.ராஜபிரியா திருமண வரவேற்பு விழா!

### கழகத்தினர் - குடும்பத்தினர் வாழ்த்துகின்றனர்!

திருவள்ளூர்,ஜூலை 9-

முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரியும் டி.தீபக் - பி.ராஜபிரியா ஆகியோரின் திருமணம் மற்றும் திருமண வரவேற்பு விழா, இன்று (9.7.2023) திருவள்ளூரில் நடைபெறுகிறது.

இம்மண விழா பற்றிய விவரம் வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம், பூங்கந்துார் கிராமம், (நினைவில் வாழும்) ஜி.பாபு - பி.சரோஜா அம்மாள் ஆகியோரின் பேரனும், பி. தேவராஜ் - டி.ராதா ஆகியோரின் புதல்வரும், முரசொலி விளம்பரப் பிரிவில் பணிபுரிபவருமான டி.தீபக்கிற்கும் திருவள்ளூர் மாவட்டம் -



திருத்தணி வட்டம் - முத்துக்கொண்டா புரம் கிராமம் (நினைவில் வாழும்) ஆர்.விஸ்வநாதன் - வி.முருகம்மாள் ஆகியோரின் பேத்தியும், வி.பழநி - பி.நைனியம்மாள் ஆகியோரின் புதல்வியுமான பி.ராஜபிரியாவிற்கும் திருமணம் இன்று (9.7.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணி அளவில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து, திருமண வரவேற்பு விழா, இன்று மாலை 6 மணி அளவில் திருவள்ளூர், காக்களூர் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள தனமணிராஜ் மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவிலும் - மணவிழா வரவேற்பிலும் கழக நிர்வாகிகள், குடும்பத்தினர், நண்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பி.பூபதி - பி.சங்கரி, பி.சரவணன் - எஸ்.லட்சுமி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

### குற்றாலம் அருவிகளில்

## குளிக்க அனுமதி

தென்காசி, ஜூலை 9-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தற்போது சீசன் களை கட்டி உள்ளது. இங்குள்ள மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவி, புலிஅருவி ஆகிய அனைத்து அருவிகளிலும் தண்ணீர் கொட்டுகிறது. இரு தினங்களுக்கு முன் மெயின் அருவி, ஐந்தருவி ஆகிய அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுற்றுலா பயணிகள் குளிக்க போலீசார் தடை விதித்தனர். இதனால் சுற்றுலா பயணிகள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

இந்நிலையில் குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு குறைந்ததை அடுத்து அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 100-வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா: 1000 பேருக்கு உணவு வழங்கல்!

### நே.சிற்றசு - தயாநிதிமாறன் எம்.பி.- எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, ஜூலை 9 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அண்ணாநகர் 100-வது வட்டத்தில் 1000 பேருக்கு சமபந்தி விருந்து வழங்கும் நிகழ்ச்சி இன்று (9.7.2023) பகல் 12 மணிக்கு வள்ளியம்மாள் தெருவில் வட்டச் செயலாளர் ஆ. ஏகாம்பரம் தலைமையில், வசந்தி பரமசிவம், இரா.இளங்கோவன், எஸ். ஜெயகாந்த், ஆ.ஐயப்பன் ஆகியோர் முன்னிலையில், பி.கி. கைலாசம், இரா.சாந்திபாய், பா.உதயகுமார், க. ஏழுமலை, பி.பாண்டியன், எஸ்.வெங்கடேசன், எல். பாஸ்கர், என். வீரமணி, ஆர்.பொன்முடி வரவேற்பில் நடைபெறுகிறது.

இதில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதிமாறன் எம்.பி., எம். கே.மோகன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் ஆகியோர் உணவு வழங்குகின்றனர்.

இதில் எஸ்.சேகரன், ஏ.டி.முருகன், என்.ஆனந்தன், ராணி ரவிச்சந்திரன், து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, சங்கீதா, அகஸ்டின்பாபு, கு.பாபு, கோவிந்தராஜ், திருமலை, சந்திரசேகர், ரவிக்குமார், ஜெய்சங்கர், அருள் கண்ணன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

